NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2009

# TAMIL HOME LANGUAGE: PAPER II

Time: 2½ hours | Marks: 80

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This paper consists of 11 pages.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. All answers must be in **TAMIL**.

---

IEB Copyright © 2009

## பகுதி ஒன்று

கொடுக்கப்பட்டுள்ள நான்கு கவிதைகளில் ஏதோனும் இரண்

பற்றி [2] விடை தருக:

1. கீழ்வரும் கவிதையை நன்றாகப் படித்து சரியான விடை தருக

### வேற்றுமை இல்லை
(பாட்டு - தேசியகவி பாரதியார்)

வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்!

பிள்ளைகள் பெற்றதப் பூனை -அவை
பேருக் கொருநிற மாகும்!

சாம்பல் நிறமொரு குட்டி-கருஞ்
சாந்து நிறமொரு குட்டி!

பாம்பு நிறமொரு குட்டி - வெள்ளைப்
பான் நிறமொரு குட்டி!

எந்த நிறமிருந் தாலும் - அவை
யாவும் ஒரேதர மன்றோ?

இந்த நிறம்சிறி தென்றும் - இஃது
ஏற்றமென் றும்சொல்ல லாமோ?

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் - அதில்
மானுடர் வேற்றுமை இல்லை

எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் - இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்!

IEB Copyright © 2009

1.1 கோடிட்ட இடங்களில் தகுந்த சொல்லால் நிரப்புக:

1.1.1 பிள்ளைகள் பெற்றதப்------------------------------------------------------ (1)

1.1.2 ----------------------------------------------------------நிறமொரு குட்டி (1)

1.1.3 அதில்------------------------------------வேற்றுமை இல்லை (1)

1.2 கீழ்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக:

1.2.1 வெள்ளை நிற பூனை எங்கே வளருது (1)

1.2.2 எந்தக் குட்டி சிறந்தது (1)

1.3 உண்மை அல்லது உண்மை அல்ல என்று கூறுக:

1.3.1 பூனை பிள்ளைகள் பெற்றது (1)

1.3.2 பச்சை நிற பூனை குட்டி ஒன்று இருந்தது. (2)

1.4 கீழ்வரும் சொற்களுக்கு எதிர் சொற்கள் தருக:

1.4.1 உண்டு---------------------------------------- (1)

1.4.2 அந்த------------------------------------------ (1)

**[10]**

அல்லது [or]

2. இக்கவிதையை அடிப்படையாக கொண்டு, பூனைகுட்டிகளைப் பற்றி 8 - 10 வரிகள் எழுதுக: **[10]**

IEB Copyright © 2009 

3. **கீழ்வரும் கவிதையை நன்றாகப் படித்து சரியான விடை தருக:**

## எங்கள் வீட்டு மீன் தொட்டி

எங்கள வீட்டு மாடத்தில்
இரண்டு தொட்டி உள்ளன!
தங்க மீன்கள் அவற்றினிலே
தாவித் தாவிச் செல்லுமே!

வண்ண வண்ண மீன்களெல்லாம்
வருக என்று அழைத்திடுமே!
கண்ணைச் சிமிட்டும் அழகதனைக்
காணக் கண்கள் குளிர்ந்திடுமே!

சோளப் பொறியை அக்காதான்
சுற்றிச் சுற்றிப் போட்டிடுவாள்!
கூட்டமாக வரும் மீன்கள்
கொத்திக் கொத்தித் தின்றிடுமே!

அழகைப் பார்த்து மகிழ்ந்திடலாம்!
அன்பை நெஞ்சில் வளர்த்திடலாம்!
இளைய நெஞ்சில் நன்னெறியை
ஏற்றி என்றும் வாழ்ந்திடலாம்!

மு. இளங்கோவன்

IEB Copyright © 2009

3.1 கோடிட்ட இடங்களில் தகுந்த சொல்லால் நிரப்புக:

3.1.1 ------------------------------------------மீன்கள் அவற்றினிலே (1)

3.1.2 வண்ண வண்ண ------------------------------------வருக

என்று அழைத்திடுமே. (1)

3.1.3 அன்பை ------------------------------------வளர்த்திடலாம். (1)

3.2 சரியான விடை தருக:

3.2.1 இரண்டு தொட்டி எங்கே-----------------------உள்ளன. (1)

3.2.2 எதைச் சுற்றிச் சுற்றிப் போட்டிடுவான்-------------------- (1)

3.3 <u>உண்மை</u> அல்லது <u>உண்மை அல்ல</u> என்று எழுதுக:

3.3.1 மீன்கள் கூட்டமாக வரும்------------------------------------ (1)

3.4 கீழ்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொற்கள் தருக:

3.4.1 உங்கள் ---------------------------- (1)

3.4.2 போக---------------------------------- (1)

3.5 <u>ஒருமைக்கு பன்மை தருக:</u>

3.5.1 மீன்---------------------------------- (1)

3.5.2 தொட்டி------------------------------ (1)

**[10]**

<u>அல்லது [or]</u>

3.6 இக்கவிதையை அடிப்படையாக கொண்டு மீன்களைப்பற்றி

சுமார் 8 - 10 வரிகள் எழுதுக: **[10]**

4. திருக்குறள்

4.1 சரியான விடை தருக:

4.1.1 திருக்குறளில் வரும் ஏதாவது இரண்டு பகுதிகள் யாவை? (2)

4.1.2 பின்வரும் குறள்களை நிரப்புவதற்கு ஏற்றச்சொற்களைத் தருக:

(a) ---------------------------------------------------------------------ஆதி பகவன் முதற்றே உலகு. (2)

(b) மலர் மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்---------------------
------------------------------------------------------------------------------- (2)

(c) வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு-------
------------------------------------------------------------------------------- (2)

(d) பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்-----------------------------
------------------------------------------------------------------------------- (2)

**[10]**

அல்லது [or]

4.2 திருக்குறளைப் பற்றி 10 - 12 வரிகள் எழுதுக: **[10]**

IEB Copyright © 2009

5. <u>கற்பிக்காத கவிதை</u> [Unseen poems]

<u>வானொலி</u>: கீழ்வரும் கவிதையை நன்றாகப் படித்து சரியான விடை தரு

எங்கள் அப்பா வானொலி
    இன்று புதிதாய் வாங்கினார்!
மேசை மேலே வைத்துடன்
    மெல்லத் திருகைக் சுழற்றினார்!

பாட்டும், பேச்சும் வந்தன!
    பரபரப்பாய்க் கேட்டோமே!
ஆட்டம் போட்ட தம்பிதான்
    அதற்குள் இருப்பவர் யாரென்றான்?

மாமா உள்ளே மறைந்தபடி
    மகிழ்ச்சியாகப் பாடுகிறார்!
ஆமாம் ஆமாம் என்றோமே!
    அவரைக் காணச் சென்றோமே!

<u>மு. இளங்கோவன்</u>




5.1 கோடிட்ட இடங்களில் சரியான சொற்கள் எழுதுக:

5.1.1 மெல்லத் திருகைச்-----------------------------------------

---------------------------------------போட்ட தம்பி தான் (1)

5.1.2 அதற்குள் ---------------------------யாரென்றான். (2)

5.2 சரியான விடை தருக:

5.2.1 வானொலியை வாங்கி எங்கே வைத்தார்கள்? (2)

5.2.2 யார் ஆட்டம் போட்டது? (2)

5.3 எதிர்ச் சொல் தருக:

5.3.1 கீழே------------------------------------------------ (1)

5.3.2 வெளியே ------------------------------------------ (1)

5.4 சரியாக எழுதுக:

உம்: னொலிவா
=வானொலி

5.4.1 மந்றைபடித ------------------------------------------ (1)

**[10]**

<u>அல்லது [or]</u>

வானொலியைப் பற்றி 8 - 10 வரிகள் எழுதுக:

**[10]**

**30 marks**

IEB Copyright © 2009

## பகுதி இரண்டு

### கதை

கொன்றை வேந்தன் விளக்கக் கதைகளிலிருந்து இரு நண்பர்கள் என்ற கதையைப்பற்றி சுமார் 20 வரிகள் எழுதுக: **[25]**

IEB Copyright © 2009

அல்லது/[or]

12 கொன்றை வேந்தன் விளக்கக் கதைகளிலிருந்து இரு நண்பர்கள் என்ற கதையைப்பற்றி சுமார் 20 வரிகள் எழுதுக : [25]

[C] கட்டுரை : கதை பகுதி

## கள்ளர்கள் கொள்ளை

மட்டியூர் என்னும் ஊரிலே மாணிக்கசாமி என்னும் பெயருடைய செல்வன் ஒருவன் நாற்பது ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்திருந்தான். அவன் பல வழிகளாலும் பொருளைத் தேடினான். அவனிடம் ஏராளமான பொருள் குவிந்தது. மாணிக்கசாமி அந்தப் பொருள்களை நன்கு பயன்படுத்தவில்லை. எளியவர்களுக்கு ஒன்றும் கொடான். விருந்தினர்களுக்குக் கூட உணவிடான். விருந்தினர்களைக் கண்டால் ஏதேனும் சாக்குப்போக்குச் சொல் அனுப்பி விடுவான்.

புலவர்கள் இவன் பெருஞ்செல்வனாக இருக்கிறானே! ஏதேனும் உதவி செய்வான் என்று சென்றால், 'சோம்பேறிகளாகத் திரியும் உங்களுக்கு ஏன் பொருள் கொடுக்க வேண்டும்' என்று வாய்க்கு வந்தபடி இகழ்ந்துரைப்பான். தானும் தக்கவாறு பொருளைச் செலவிட்டு உண்ண மாட்டான். உண்ண விரும்பும் மனைவி மக்களையும் உண்ண விடமாட்டான். பொருள்கள எல்லாம் பெட்டிகளில் பூட்டி வைத்தான். அப்பெட்டிகள் மீது தானே இராப்பகல் காவலாக இருந்து கொண்டிருந்தான்.

சாவு என்று ஒன்று இருக்கின்றது என்பதையும் அது தனக்கும் உண்டாகும் என்பதையும் மாணிக்கசாமி அடியோடு மறந்து விட்டான். அப்பொருள்களைக் கள்ளர்கள் வந்து கவர்ந்துகொண்டால் என்ன செய்வது என்னும் அச்சம் மாத்திரம் அவன் உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்தது. அதனால் அவன் இராப்பகல் உறக்கம் கெட்டு வருந்திக் கொண்டிருந்தார்.

மாணிக்கசாமியிடம் பொருள் இருப்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு நாள் இரவு தீவட்டிக் கொளைக்காரர்கள் பலர் மாணிக்கசாமியின் வீட்டைச் சூழ்ந்து கொண்டனர்.

மாணிக்கசாமியைத் தடிகளால் நன்கு புடைத்தனர். முன்னரே உறக்கம் இல்லாமல் இளைத்திருந்த மாணிக்கசாமி குற்றுயிராகி விட்டான். மாணிக்கசாமியின் மனைவி மக்கள் கள்ளர்களின் அச்சத்தால் எப்பொழுதும் வீட்டில் படுக்கும் வழக்கம் இல்லை. பக்கத்தில் உள்ள வீடுகளில் தாம் படுப்பார்கள்.

கள்ளர்கள் கொள்ளை இடுவதை ஊரார்கள் பார்த்தனர். கள்ளர்கள் மிகுதியாக இருந்தபடியாலும் தடுக்க முடியவில்லை. கள்ளர்கள் மாணிக்கசாமியின் பொருள்கள் அனைத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர். மாணிக்கசாமி, 'அந்தோ! நான் கூட்டிக் கூட்டிக் கொள்ளை கொடுக்கும் தேனீ ஆனேனே!' என்று புலம்பி நொந்து இறந்தான்.

'ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.'

1.1 கீழ்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக

1.1.1 மாணிக்கசாமி எந்த ஊரில் வாழ்ந்திருந்தான்? (3)

1.1.2 விருந்தினர்களைக் கண்டால் மாணிக்கசாமி என்ன சொல் அனுப்பி விடுவான்? (3)

1.1.3 மாணிக்கசாமியைப் புலவர்கள் தேடிச் சென்றபோது மாணிக்கசாமி
எதைச் சொல் இகழ்ந்துரைப்பான்? (3)

1.1.4 மாணிக்கசாமி எதை அடியோடு மறந்துவிட்டான்? (5)

1.1.5 ஒரு நாள் இரவில் மாணிக்கசாமியின் வீட்டுக்கு யார் வந்தார்கள்
அவர்கள் என்ன செய்தார்கள்? (5)

1.1.6 கடைசியில் மாணிக்கசாமி என்ன சொல் நொந்து இறந்தான்? (6)

**[25]**

1.2 அல்லது [or]

இக்கதையை நன்றாக படித்து, சுமார் 20 - 25 வரிக்குள் சுருக்கி எழுதுக : **[25]**

**50 marks**

**Total: 80 marks**

IEB Copyright © 2009